**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.597** **நாள்: 21.10.2026**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், கொட்டிவாக்கத்தில் ரூ.97.98 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வார்டு அலுவலகக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, கோட்டூர்புரத்தில் ரூ.23.10 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்து, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (21.10.2026) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் முன்னிலையில், பெருங்குடி மண்டலம், வார்டு-181க்குட்பட்ட கொட்டிவாக்கம், கிழக்குக் கடற்கரை சாலையில் மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.97.98 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட வார்டு அலுவலகக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடமானது 121.60 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் மாமன்ற உறுப்பினர் அறை, வரிவசூலிப்பாளர் அறை, சேமிப்பு அறைகள் மற்றும் கழிப்பிடமும், முதல் தளத்தில் உதவிப் பொறியாளர்கள் அறை, சுகாதார ஆய்வாளர் அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு-170க்குட்பட்ட கோட்டூர்புரம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள 128 வீடுகளுக்கான வளாகத்தில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.23.10 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

இந்த அடுக்குமாடி குடியிருப்பில் பிளாக்-Aல் 32 குடியிருப்புகள், பிளாக்-Bல் 40 குடியிருப்புகள், பிளாக்-Cல் 56 குடியிருப்புகள் என மொத்தம் 128 குடியிருப்புகள் உள்ளன.

பின்னர், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-123க்குட்பட்ட சி.பி. ராமசாமி சாலையில் ரூ.7.97 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இச்சமுதாய நலக் கூடம் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.5.50 கோடி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.2.47 கோடி என மொத்தம் ரூ.7.97 கோடி மதிப்பீட்டில் 12,912 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும்

இரண்டு தளங்களுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் வாகன நிறுத்துமிடம், முதல் தளத்தில் உணவருந்தும் கூடம், இரண்டாம் தளத்தில் சுமார் 350 நபர்கள் அமரக்கூடிய வகையில் திருமண மற்றும் பல்நோக்கு விழா அரங்கத்துடன் நவீன வசதிகளுடன் கூடிய முழுமையான குளிர்சாதன வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, அடையாறு மண்டலம், வார்டு-176க்குட்பட்ட ஏ.ஜி.எஸ். காலனியில் தேங்கியுள்ள மழைநீர் அகற்றப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.சி.ஆர். ப. சரவணன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (கல்வி) திரு.த.விசுவநாதன், மண்டலக் குழுத் தலைவர்கள் திரு.எஸ்.வி.ரவிச்சந்திரன், திரு.ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர். கதிர்முருகன், திரு.கி. மதிவாணன், திரு.கே. ஏழுமலை, திரு.வே. ஆனந்தம் மற்றும் மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**